இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 13-07-2023

# குற்றப்பத்திரிக்கை - 2

**26.** அரசியலமைப்பு சட்ட விதிமுறைகளுக்கு மாறாக 9.1.2023 அன்று சட்டமன்றத்தில் ஆளுநர் நடந்து கொண்டார். தமிழ்நாடு அரசால் தயாரித்து அனுப்பி வைக்கப்பட்டு, அவரால் ஒப்புதல் பெறப்பட்ட உரையை வாசிக்காமல் புறக்கணித்தார். இதன்மூலம், மாநிலத்தின் மற்றும் அரசாங்கத்தின் நெறிமுறைகளை ஆளுநர் பகிரங்கமாக கேள்விக்குள்ளாக்கினார்.

27. முதலீடுகளை ஈர்க்க நான் வெளிநாடு சென்றிருந்த போது, 'வெளிநாடு சென்று அழைப்பதால் முதலீடுகள் வராது' என்று அவர் சொன்னது அவரது மலிவான அரசியலையே காட்டுகிறது.

28. கிரிமினல் குற்றங்கள் குறித்து ஆதாரமற்ற மற்றும் தவறான அறிக்கைகளை வெளியிட்டு வருகிறார்.

29. சிதம்பரத்தில் குழந்தைத் திருமணம் நடைபெறவில்லை என்றும், பழிவாங்கும் நோக்கில் நடராஜர் கோயில் தீட்சிதர்கள்மீது மாநில அரசின் சமூக நலத்துறை 8 பொய்யான புகார்களைப் பதிவு செய்துள்ளதாகவும் அவர் பேட்டி தருவது காவல் துறையின் விசாரணைக்கு இடையூறு செய்வது ஆகும்.

30. குழந்தை திருமணம் செய்விக்கப்பட்ட சிறுமிகளிடம் தடை செய்யப்பட்ட இரு விரல் பரிசோதனை நடந்ததாக பொய் தகவலை பரப்புகிறார்.

இப்படி ஒரு சாதாரண நபர் சொல்லி இருந்தால் அந்த நபர் மீது உரிய சட்டப் பிரிவுகளின் கீழ், காவல்துறையினர் நிச்சயம் வழக்குப்பதிவு செய்திருப்பார்கள் என்றும், குழந்தைத் திருமணம் என்ற கொடிய குற்றத்தில் இருந்து காப்பாற்றும் வகையில், கருத்துத் தெரிவிப்பதை நல்ல மனசாட்சி உள்ள யாராலும் அனுமதிக்க முடியாது.

31. அமைச்சர்கள் நியமன விவகாரத்தில் 164(1) பிரிவுக்கு முரணாகவும், எனது ஆலோசனைக்கு முரணாகவும் அவர் செயல்படுகிறார்.

32. அமைச்சர் செந்தில்பாலாஜி விவகாரத்தில் ஆளுநர் ஒரு உத்தரவை போடுகிறார். அதை அவரே வாபஸ் வாங்கிக் கொள்கிறார். இந்தியாவின் முன்னணி இதழ்கள் எல்லாம் அவரது நடவடிக்கையைக் கண்டித்து தலையங்கம் தீட்டி உள்ளன. இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் ஆளுநர் பதவியை சிறுமைப்படுத்தி விட்டார்.

33. ஏதோ ஒரு கட்சி அல்லது கருத்தியலின் நலனை வளர்ப்பதற்காக ஆளுநர் செயல்பட்டு வருகிறார்.

34. ஒன்றிய ஆளும் கட்சியை எதிர்க்கும் ஒரு கட்சியின் கைகளில் மாநில ஆட்சி இருக்கும்போது, மாநிலத் தலைநகர்களில் அமர்ந்து கொண்டு, அந்த மாநில அரசை கவிழ்க்கும் வாய்ப்பைத் தேடும் ஆளுநரை வெறும் ஒன்றியத்தின் முகவராகத்தான் கருதமுடியும் .

35. இந்திய ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவத்தை அழிக்க நினைப்பவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறார்.

36. அரசியல் சாசனத்தின் 159-ஆவது பிரிவின்கீழ் எடுத்த உறுதி மொழியை மீறி இருக்கிறார்.

37. தனது நடத்தை மற்றும் செயல்பாடுகள்மூலம், தான் ஒருதலைப் பட்சமானவர் மற்றும் ஆளுநர் பதவியை வகிக்க தகுதியற்றவர் என்பதை நிரூபித்துள்ளார்.

38. ஆர்.என்.ரவி உயர் பதவியில் இருந்து நீக்கப்படுவதற்கு தகுதியானவர்.

**"நமது இந்திய அரசியலமைப்பை உருவாக்கிய முன்னோர்களின் உணர்வையும், மாண்புகளையும் பாதுகாக்கும் வகையில், ஆளுநர் போன்ற உயர்ந்த அரசியலமைப்புப் பதவியில் ஆர்.என். ரவி அவர்கள் நீடிப்பது விரும்பத்தக்கதாகவோ அல்லது பொருத்தமானதாகவோ உள்ளதா என்பதை இந்தியக் குடியரசுத் தலைவரின் முடிவுக்கே விட்டு விடுகிறேன்" என்று சொல்லி இந்திய நாட்டின் குடியரசுத் தலைவரின் மனச்சாட்சியை நோக்கி கேள்வி எழுப்பி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.**

குஜராத் மாநில ஆளுநருக்கு எதிராக ஒரு காலத்தில் போர்க்கொடி தூக்கியவர்தான் இன்றைய பிரதமர் மோடி அவர்கள். அவர் அப்போது குஜராத் முதமைச்சராக இருந்தார். "உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கும் மசோதாவைக் குஜராத் மாநில பெண் ஆளுநர் கமலா பெனிவால் ஒப்புதல் அளிக்காமல் வைத்திருக்கிறார். பெண்களுக்கு எதிரியாகப் பெண் ஆளுநரே இருக்கிறார். ஒரு பெண்மணி குஜராத்தின் ஆளுநராக இருந்தும், பெண்களுக்கான இட ஒதுக்கீட்டு மசோதாவை நிறைவேற்ற முடியாமல் போனது நமது துரதிருஷ்டமே" - என்று 2013 ஏப்ரல் 8ம் தேதி டெல்லியில் நடந்த இந்தியத் தொழிலக சம்மேளனத்தின் (FICCI) கூட்டத்தில் பேசினார் அப்போதைய குஜராத் முதல்வர் மோடி. அத்தகைய மோடி அவர்கள், இன்று ஆளுநர் ரவியை அடக்கி வைக்காமல் இன்னும் இருப்பது ஏன்?

**மாநில அரசின் சுருக்கெழுத்துதான் ஆளுநர் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. 'மாநில அரசு முடிவெடுத்தால் அதனை ஆளுநர் ஏற்க வேண்டும்' என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. 'ஆளுநர்கள் அரசியல் களத்தில் இறங்கக் கூடாது' என்றும் உச்சநீதிமன்றம் சொல்லி இருக்கிறது. அமைச்சரவையின் முடிவுக்கு கட்டுப்பட்டவர் என்றும், இறுதி அதிகாரம் அமைச்சரவைக்கே என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அத்து மீறும் ஆளுநர்களை தொடர்ந்து உச்சநீதிமன்றம் கண்டித்தே வருகிறது. ஆனால் அதனை ஆளுநர்கள்தான் புரிந்து கொள்வது இல்லை. பிரிட்டிஷ் ஆட்சி கவர்னராக, கவர்னர் ஜெனரலாக நினைத்துக் கொள்கிறார்கள்.**

**மாநில அமைச்சரவையின் சுருக்கெழுத்தாளரான ஆளுநர், முதலமைச்சரின் இந்தக் கடிதத்தை முழுமையாக படிக்க வேண்டும். ஆளுநர் வாசித்தால் ஒரு நிமிடம் கூட இந்தப் பதவியில் இருக்க மாட்டார்.**




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2023) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத் துறை சார்பில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் தாம்பரம் கிழக்கு, தாம்பரம் மேற்கு, குன்றத்தூர் மற்றும் அம்பத்தூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நான்கு புதிய வங்கிக் கிளைகளை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலாளர் முனைவர் டி.ஜகந்நாதன், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மருத்துவர் ந.சுப்பையன், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் ம.அந்தோணி சாமி, ஜான் பீட்டர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் 4 புதிய கிளைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜூலை 13 -

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் நான்கு புதிய கிளைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2023) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத் துறை சார்பில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் தாம்பரம் கிழக்கு, தாம்பரம் மேற்கு, குன்றத்தூர் மற்றும் அம்பத்தூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நான்கு புதிய வங்கிக் கிளைகளை திறந்து வைத்தார்.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி 1905 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 118 ஆண்டுகளைக் கடந்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அகில இந்திய அளவில், செயல்படும் அனைத்து தலைமைக் கூட்டுறவு வங்கிகளில், தொடங்கியது முதல் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வரும் ஒரே வங்கி தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி ஆகும். சென்னையில் சுமார் 5 இலட்சம் வாடிக்கையாளர்களுக்கு வங்கிச் சேவைகளை அளித்து வரும் இவ்வங்கி தற்போது 47 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது.

இவ்வங்கி, 2022 - 23ம் நிதியாண்டில், 31,484 கோடி ரூபாய் அளவிற்கு வர்த்தகம் மேற்கொண்டு, 114.78 கோடி ரூபாய் நிகர இலாபமாக ஈட்டியுள்ளது. இவ்வங்கியின் முதலீடுகள் ரூ.4,615 கோடியாகவும், வாடிக்கையாளர்களின் வைப்பீடுகள் ரூ.12,486 கோடியாகவும் உள்ளது.

இவ்வங்கியில் தமிழ்நாடு அரசின் பங்கு மூலதனம் 20.26 கோடி ரூபாய் ஆகும். வணிக வங்கிகளுக்கு நிகராக, வங்கியின் அனைத்துச் சேவைகளும் கணினி வழியில் மட்டுமே நடைபெறுகிறது.

மேலும், துரிதப் பணப்பரிமாற்றச் சேவைகளான RTGS, NEFT, IMPS, UPI, இணையவழி வங்கிச் சேவை, கைபேசி வழிச் சேவை, தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரங்கள் என அனைத்து கணினிவழி வசதிகளையும் இவ்வங்கி கொண்டுள்ளது.

சென்னை மாநகராட்சியின் எல்லைகள் விரிவடைந்ததைத் தொடர்ந்து, விரிவாக்கம் செய்யப்படாமலிருந்த இவ்வங்கியின் கிளைகள், கூட்டுறவுத் துறையின் 2023 - 24ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க, இந்திய ரிசர்வ் வங்கியின் உரிமம் பெற்று தாம்பரம் கிழக்கு, தாம்பரம் மேற்கு, குன்றத்தூர் மற்றும் அம்பத்தூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நான்கு புதிய வங்கிக் கிளைகள் முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலாளர் முனைவர் டி.ஜகந்நாதன், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மருத்துவர் ந.சுப்பையன், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் ம.அந்தோணிசாமி ஜான் பீட்டர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை - ரிப்பன் கட்டட வளாகத்தில்

# உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு நிகழ்ச்சி!

## மேயர் திருமதி. ஆர்.பிரியா தலைமையில் நடைபெற்றது!

*சென்னை, ஜூலை 13-*

*உலக மக்கள் தொகை தினமான ஜூலை 11ஆம் நாளை உலக மக்களுக்கு உணர்த்தும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை அந்நாளை "உலக மக்கள் தொகை தினம்" என்று அறிவித்து, பெருகி வரும் மக்கள் தொகையினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மக்கள் விழிப்புணர்வு பெற ஆண்டுதோறும் ஜூலை மாதம் 11ஆம் நாள் உலக மக்கள் தொகை தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.*

*அதனடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் மருத்துவச் சேவைகள் துறையின் சார்பில் மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று முன்தினம் (11.07.2023) ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்றது.*

*இந்நிகழ்ச்சியில், மேயர் தலைமையில் குடும்பநல உறுதிமொழியினை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக் கொண்டனர்.*

*இதனைத் தொடர்ந்து, உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சு மற்றும் கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மூன்று மாணவியருக்கு மேயர் பிரியா பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்.*

*மேலும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், குடும்ப நலக்கட்டுப்பாட்டு முறைகள் (தற்காலிக மற்றும் நிரந்தர) குறித்து மக்களுக்கு தெரிவிக்கும் வகையிலான மூன்று விழிப்புணர்வு வாகனங்களை மேயர் பிரியா கொடியசைத்து தொடங்கி வைத்தார்.*

*இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ் குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதா கிருஷ்ணன், நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, மாநகர நல அலுவலர் டாக்டர் எம்.ஜெகதீசன், மாநகர மருத்துவ அலுவலர் டாக்டர் எஸ்.பானுமதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

# வணிகர் நல வாரியத்துக்கு உறுப்பினர்கள் நியமனம்!

## தமிழ்நாடு அரசு உத்தரவு!

*சென்னை, ஜூலை 13 -*

*தமிழக வணிகவரி மற்றும் பதிவுத் துறை செயலாளர் ஜோதி நிர்மலா சாமி வெளியிட்ட, அரசாணையில் கூறப்பட்டிருப்பதாவது:-*

*தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தை மாற்றி அமைத்து அரசு உத்தர விடுகிறது. அதன்படி அதன் தலைவராக முதல்அமைச்சரும், துணை தலைவராக வணிக வரித்துறை அமைச்சரும் இருப்பார்கள்.*

*அலுவல் சார்ந்த உறுப்பினராக வணிக வரி மற்றும் பதிவுத் துறை செயலாளர், வணிக வரி கமிஷ்னர், நிதித்துறை முதன்மை செயலாளர் உள்பட 5 பேர் இருப்பார்கள்.*

*தற்போது வணிக வகைகளின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்து உள்ளதால் அனைத்துப் பிரிவுகளுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில், அலுவல் சாரா உறுப்பினர்களின் எண்ணிக்கையை 20ல் இருந்து 30ஆக உயர்த்தி அரசு நியமனம் செய்கிறது.*

*சென்னையைச் சேர்ந்த வி.பி.மணி. எ.எம்.சதக்கத் துல்லா, ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டன், மதுரையைச் சேர்ந்த எஸ்.ரத்தினவேலு, குணவிலாஸ் முருகேசன், தூத்துக்குடி ரெங்கநாதன், திருச்சி எம்.கண்ணன் உள்பட 30 அலுவல் சாரா உறுப்பினர்களை நியமனம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிடுகிறது.*

*இவர்களின் பதவிக்காலம் 2 ஆண்டுகள் நீடிக்கும், மற்றவர்கள் 3 ஆண்டுகள் செயல்படுவார்கள்*

*இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.*



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (11.7.2023) உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் மற்றும் உயர்கல்வித்துறை அரசு முதன்மைச் செயலாளர், ஆ.கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு வழிகாட்டி (Guidance Tamil Nadu), WM குளோபல் டெக்னாலஜி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் (வால்மார்ட்) மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகம் ஆகியோருக்கிடையே முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. உடன் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் மருத்துவர் டி.ஜி.வினய் மற்றும் குளோபல் டெக்னாலஜி நிறுவன துணைத் தலைவர் திருமதி பிரசாந்தி பொடுகம் ஆகியோர் உள்ளனர்.